## தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகம் - 2015

---

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2007 இன் 26 ஆம் இலக்க தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவக அதிகாரச்சட்டத்தின் 13(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03**

முன்னைய ஆண்டிற்குரிய செலவினம் ரூபா 5,991,999 தொகை முன்னோக்கிய ரீதியில் மீண்டும் வெளியிடும் வகையில் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் திரண்ட இலாபத்தில் சீராக்கப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

i. நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 10,140,271 பெறுமதியான கணனி மற்றும் கட்டிடங்களின் உள்ளபடியான சந்தைப் பெறுமதியை வெளிப்படுத்தும் வகையில் 05 வருடங்களுக்கு ஒரு தடவையேனும் மீள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. முழுமையாகப் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 23,801,980 கிரயமான வாகனங்கள் பொறிகளும் உபகரணங்களும் மற்றும் கணனிகளின் நியமப் பெறுமதிகளைக் காண்பிப்பதற்காக மீள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் 2.10.2 ஆம் இலக்க குறிப்பின் கீழ் காண்பிக்கப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் நிறுவகம் மூலதன மானியம் தொடர்பாக கணக்கு வைக்காதிருந்ததுடன் அரசாங்கத்தின் மூலதன மானியம் திரண்ட இலாபத்தில் சேர்த்து காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அரசாங்க மானியத்தின் மூலம் கட்டியெழுப்பட்ட சொத்துக்கள் தொடர்பில் காலக்கழிவு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

நிறுவகத்தின் மூலம் நடாத்தப்படுகின்ற பாடநெறிகளுக்காக 03 அரசாங்க நிறுவனங்களிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 2,560,915 கூட்டுத்தொகையானது 01 வருடம் முதல் 02 வருடங்களுக்கிடையிலான காலமாக நிலுவையாகக் காணப்பட்டது.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2007 இன் 26 ஆம் இலக்க தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவக அதிகாரச்சட்டத்தின் 08 ஆம் பிரிவு | நிறுவகத்தின் அதிகாரங்களை செயற்படுத்துவதற்குத் தேவையான கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 14,673,373 பெறுமதியான நிலையான சொத்துக்களுக்காக நிலையான சொத்துப் பதிவேடு முறையான பிரகாரம் பேணிச்செல்லப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 17,595,314 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 478,601 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 17,116,713 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு எதிர்பார்த்த பிரகாரம் 180 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்ததுவதற்காக் கிடைத்த ரூபா 8,405,568 தொகை உரிய பயிற்சி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தாமல் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டமை மற்றும் செலவினங்களில் பொருண்மையான குறைவு ஏற்பட்டமை என்பன பிரதான காரணங்களாக இருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டுகளில் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் போது 2011 ஆம் ஆண்டில் நிறுவகம் பெற்றிருந்த இலாப நிலை 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் நட்ட நிலைக்கு உள்ளாகியிருந்ததுடன் அந்த நட்டம் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 15,608,863 ஆக இருந்தது. எவ்வாறாயினும் மீண்டும் 2014 ஆம் ஆண்டு முதல் இலாப நிலை முன்னேற்றமடைந்திருந்தது. இதற்கு மேலதிகமாக ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு சீராக்கல்களின் பின்னர் ஒட்டு மொத்த பங்களிப்பு மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 37,152,107 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007 ரூபா 26 ஆம் இலக்க தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவக அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் நோக்கங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

- சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளை கற்பிப்பதற்கு திறமையான ஆசிரியர்களை உருவாக்குதல்
- சிங்களம், தழிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் திறனான மொழி பெயர்ப்பாளர்களையும் உரைநடை மொழி பெயர்ப்பாளர்களையும் உருவாக்குதல்
- சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் ஆசிரியர்கள், மொழி பெயர்ப்பாளர்கள் மற்றும் உரைநடை பெயர்பாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்கு தகைமை பெற்ற ஆசிரியர்களை உருவாக்குதல்
- பொது மக்களுக்கு செயற்திறனான சேவையினை வழங்குவதற்காக மும் மொழிகளிலும் இயலுமையுள்ளவர்களுக்குப் பயிற்சியளித்தல்.

(ஆ) 2007 இன் 26 ஆம் இலக்க தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவக அதிகாரச்சட்டத்தின் 04 மற்றும் 05 ஆம் பந்தி பிரிவுகளில் காணப்படுகின்ற நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அவற்றை அடைந்து கொள்ளும் முறைகளை தெளிவாகக் காட்டுகின்ற செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படாதிருந்தமை பின்வரும் விடயங்களின் பிரகாரம் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

- தேசிய மொழிப்பெயர்ப்பாளர் சேவை மற்றும் உரைநடை மொழிபெயர்ப்பாளர் சேவைக்காக நியமிக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நிபுணத்துவத்தை ஏற்படுத்துவதற்காக தேவையான பயிற்சிப்பாட நெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.
- சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளின் மொழி பெயர்ப்பாளர்களுக்கும் உரைநடை மொழிபெயர்ப்பாளர்களுக்கும் பயிற்சியளிப்பதற்காக தகைமை பெற்ற ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்கான பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.
- நிறுவகத்தின் செயற்படுநிலையை செயற்திறனாக பேணிச் செய்வதற்காக ஆராய்ச்சி மற்றும் கற்கைகளின் பெறுபேறுகளைப் பயன்படுத்தும் நோக்கத்துடன் பயிற்சியளித்தல்களில் காணப்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் கற்கைகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
- சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் போன்ற மொழிகளிலும் வெளிநாட்டு மொழிகள் தொடர்பான மொழிரீதியான ஆராய்ச்சி நடவடிக்கைகளைச் செய்தல், அவற்றிற்கு ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை

(இ) மீளாய்வாண்டில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்காக 4 மட்டங்களின் கீழ் 265 பகுதி நேர மொழிப் பயிற்சி வகுப்புக்களை நடாத்துவதற்கு ரூபா 20,083,200 தொகையொன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 10,121,425 செலவில் 207 பயிற்சி வகுப்புக்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

### 4.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------

நிறுவகத்திற்காக நிதி நிர்வாக செயல்நடைமுறைக் கோவையொன்றை தயாரிப்பதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி பணிப்பாளர் சபையின் அங்கத்தவரொருவருக்கு ரூபா 45,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த செயல்நடைமுறைக் கோவை நிறுவகத்தின் பணிகளை நிறைவேற்றும் போது பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறைவேற்றுத்தர மட்டத்தின் கீழ் 05 கற்கை மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் 04 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் தற்போது சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தரும் வேலை நீக்கத்திற்கு உள்ளாகியிருந்தார். இதன் காரணமாக நிறுவகம் உருவாக்கப்பட்ட அதிகாரச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (ஆ) பந்தியின் பிரகாரம் நிறுவகத்தின் செயல்பாட்டு நிலையை செயற்திறனாக நடாத்திச் செல்வதற்காக ஆராய்ச்சி மற்றம் கற்கைகளின் விளைவுகளை பயன்படுத்தும் நோக்கத்துடன் மொழிப்பயிற்சியினைக் வழங்குவதுடன் தொடர்புடையதாக காணப்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் கற்கைகளை நடாத்துவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) 8 இணைப்பு உதவியாளர் பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டமையின் காரணமாக பல்வேறு பாட நெறிகளினதும் வகுப்புக்களினதும் கொடுப்பனவுகள் பூர்த்தி செய்யப்படாமை, ஆளணிக் கோவைகளும் வாகனக் கோவைகளும் முறையாகக் பராமரிக்கப்படாமையால் நிறுவகத்தின் செயற்பாடுகளை செயற்திறனாகவும் முறையாகவும் பேணிச் செல்வது தொடர்பில் தாக்கமளித்திருந்தது.

**5 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 ஆண்டறிக்கையினை சபையில் சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான வரைபு ஆண்டறிக்கை 2016 மே 10 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**5.2 உள்ளகக் கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்காக உள்ளகக் கணக்காய்வாளர் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஆ) தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட 5 உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்கள் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்ட குறைபாடுகளைச் சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிப்பிரமாணம் 134(1) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளர் நேரடியாக தலைவருக்கு தனது அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கை பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**5.3 கணக்காய்வுக் குழு**

2010 திசெம்பர் 14 ஆந் திகதிய 55 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 15 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வுக் குழுவின் சிபாரிசுகள் பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் சுருக்கமாக |
|---|---|
| (அ) நிதிக் கட்டுப்பாடு | நிர்வாகம் நடாத்திய பாடநெறிக்குரிய நிலுவை வருமானங்களை அறவிடத் தவறியமை, முன்னைய ஆண்டுகளுக்குரிய கொடுப்பனவுகளைத் தீர்த்து வைப்பதற்குத் தவறியமை. |
| (ஆ) பதவியணியின் நிர்வாகம் | வெற்றிடப் பதவிக்கான ஆட்சேர்த்தல் தாமதிக்கப்பட்டமை, ஊழியர் மேற்பார்வை நலிவாக இருந்தமை. |